# அகில இலங்கைத் தமிழ்மொழித் தினம் - 2024

***அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப் போட்டிகள் தொடர்பான கல்விச் செயலாளரின் 35/2018ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின்***

## *2024 ஆம் ஆண்டுக்கான இணைப்பு*

*தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை*
***தமிழ்மொழி அலகு***
*கல்வியமைச்சு*
*இசுருபாய*

எனது இல: ED/01/05/03/05/01
தமிழ்மொழி அலகு
கல்வி அமைச்சு,
இசுருபாய
2024.02. 20

சகல மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் தொடர்பான கல்விச் செயலாளரின் 35/2018ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான இணைப்பு**

01. 2024 ஆம் ஆண்டுக்குரிய அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகள் யாவும், இவ் இணைப்பில் குறிப்பிடப்படும் விடயங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாகவும், சுற்றுநிருப இலக்கம் 35/2018 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாகவும் நடைபெறும்.

02. இவ்வருடமும் சகல போட்டிகளையும் (50), தரம் 04 தொடக்கம் தரம் 13 வரையிலான சகல வகுப்புகளுக்கும் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. 2024ஆம் ஆண்டிற்குரிய போட்டிகள் நடாத்தப்பட வேண்டிய திகதிகள் பின்வருமாறு:

1. பாடசாலை மட்டப் போட்டிகள் - 2024.04.30 ஆம் திகதிக்கு முன்னர்
2. வலய மட்டப் போட்டிகள் - 2024.07.16 ஆம் திகதிக்கு முன்னர்
3. மாகாண மட்டப் போட்டிகள் - 2024.08.16 ஆம் திகதிக்கு முன்னர்

04. தேசிய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் **2024.08.23ஆம் திகதிக்கு முன்னர்** கல்வி அமைச்சின் தமிழ்மொழி அலகிற்கு அனுப்பப்படல் வேண்டும்.

05. 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்டப் போட்டிகள் யாவும் **2024.10.12, 13 மற்றும் 2024.10.19,20** ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

**இணைப்புகள் வழங்கப்பட்டுள்ள போட்டிகள் பற்றிய விபரங்கள்**

| தொ. இல | போட்டி இலக்கங்கள் | போட்டியின் பெயர் | பிரிவு/பிரிவுகள் |
|---|---|---|---|
| 1 | 20, 21, 22 | பேச்சு | 01, 02, 03 |
| 2 | 25, 26, 27, 28 | பாவோதல் | 01, 02, 03, 04 |
| 3 | 29 | இலக்கிய விமர்சனம் | 05 |
| 4 | 32 | இசையும் அசைவும் | 01 |
| 5 | 33, 34, 35, 36 | இசை - தனி | 02, 03, 04, 05 |
| 6 | 37, 38 | இசை - குழு | குழு – 1, குழு - 11 |
| 7 | 39, 40, 41, 42 | நடனம் - தனி | 02, 03, 04, 05 |
| 8 | 43 | நடனம் - குழு - 1 | குழு 1 |
| 9 | 44 | நாட்டிய நாடகம் | தி.போ |
| 10 | 46 | இலக்கிய நாடகம் | தி.போ |
| 11 | 47 | வில்லுப்பாட்டு | தி.போ |
| 12 | 50 | முஸ்லிம் நிகழ்ச்சி | தி.போ |

**1. போட்டி இல : 20 பேச்சு முதலாம் பிரிவு : தரங்கள் 04, 05**

**1.1 விடயத் தலைப்புகள் :**

1. அன்னையே தெய்வம்
2. நன் மாணாக்கன்
3. அறஞ்செய விரும்பு
4. உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவோம்

**2. போட்டி இல : 21 பேச்சு இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**2.1 விடயத் தலைப்புகள் :**

1. குருவைப் போற்றுவோம்
2. வாசிப்பே வாழ்வு தரும்
3. விளையாட்டும் உடல் நலனும்
4. மரம் நடுவோம்

**3. போட்டி இல : 22 பேச்சு மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09**

**3.1 விடயப் பரப்பு :**

1. போதையற்ற நாடு
2. தொழில்திறனுடன் கூடிய கல்வி
3. ஒத்துணர்வு
4. பெண்ணில் பெருந்தக்க யாவுள

**4. போட்டி இல : 25 பாவோதல் முதலாம் பிரிவு : தரங்கள் 04, 05**

**4.1 விடயம்**

**4.1.1 திருக்குறள் :** அதிகாரம் - 04 : அன்புடைமை

(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)

**4.1.2 பாரதியார் கவிதைகள்: தேசிய கீதம் - பாரததேசம்**

ஆயுதம் செய்வோம்நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்

**4.1.3 நாலடியார் : பாடல் : 157 மேன்மக்கள்**

கள்ளார், கள்ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார் - தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயின் பரிவ திலர்

**5. போட்டி இல : 26 பாவோதல் இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07**

**5.1 விடயம்**

**5.1.1 திருக்குறள் :** அதிகாரம் - 04 : அறன் வலியுறுத்தல்
அதிகாரம் - 13 : அடக்கமுடைமை

(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)

**5.1.2 பாரதியார் கவிதைகள் : பக்திப்பாடல்கள் - வேண்டுவன**

*மனதி லுறுதி வேண்டும்*
*வாக்கினி லேயினிமை வேண்டும்*
*நினைவு நல்லது வேண்டும்*
*நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்*
*கனவு மெய்ப்பட வேண்டும்*
*கைவசமாவது விரைவில் வேண்டும்*
*தனமு மின்பமும் வேண்டும்*
*தரணியிலே பெருமை வேண்டும்.*

**5.1.3 நாலடியார் : பாடல் : 253 அறிவின்மை**

*கல்லென்று தந்தை கழற அதனையோர்*
*சொல்லென்று கொள்ளாது இகழ்ந்தவன் - மெல்ல*
*எழுத்தோலை பல்லார்முன் நீட்டவிளியா*
*வழுக்கோலைக் கொண்டு விடும்*

**6. போட்டி இல : 27 பாவோதல் மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09**

**6.1 விடயம்**

**6.1.1 திருக்குறள் :** *அதிகாரம் - 12 : நடுவுநிலைமை*
*அதிகாரம் - 24 : புகழ்*

*(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)*

**6.1.2 பாரதியார் கவிதைகள் : தனிப்பாடல்கள் – புதுமைப்பெண்**

*ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்*
*அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்*
*பூணு நல்லறத் தோடிங்குபெண்ணுருப்*
*போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்*
*நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்*
*ஞான நல்லறம் வீர சுதந்திரம்*
*பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்*
*பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ!*

*நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்*
*நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்*
*திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்*
*செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்*
*அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்*
*அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை*
*உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்*
*உதய கன்னி யுரைப்பது கேட்டீரோ!*

**6.1.3 நாலடியார் : பாடல் 187 - பெருமை**

*இசைந்த சிறுமை இயல்பிலா தார்கண்*
*பயந்த துணையும் பரிவாம் - அசைந்த*
*நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கண்*
*பகையேயும் பாடு பெறும்.*

**6.1.4 நளவெண்பா : பாடல் 39 - சுயம்வரகாண்டம்**

*நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா*
*வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா – வேற்படையும்*
*வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீ*
*ழாளுமே பெண்மை யரசு*

***7. போட்டி இல : 28 பாவோதல் நான்காம் பிரிவு : தரங்கள் 10, 11***

***7.1 விடயம்***

***7.1.1 திருக்குறள் :*** *அதிகாரம் - 28 : கூடா ஒழுக்கம்*
*அதிகாரம் - 41 : கல்லாமை*

*(திருக்குறள் பகுதிகளுக்காக மு. வரதராசன் அவர்களின் உரை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது)*

***7.1.2 பாரதியார் கவிதைகள் : தனிப்பாடல்கள் - நிலாவும் வான்மீனும் காற்றும்***

*பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றிற்*
*படுத்துப் புரளாதே,*
*வென்றியை நாடிவ் வானத்தி லோட*
*விரும்பி விரைந்திடுமே*
*முன்றிலி லோடுமோர் வண்டியைப் போலன்று*
*மூன்றுலகுஞ் சூழ்ந்தே*
*நன்று திரியும்வி மானத்தைப் போலொரு*
*நல்ல மனம் படைத்தோம்.*

*தென்னையின் கீற்றுச்சலசல வென்றிடச்*
*செய்து வருங்காற்றே*
*உன்னைக் குதிரைகொண் டேறித் திரியுமோ*
*ருள்ளம் படைத்து விட்டோம்.*
*சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டிங்கு*
*சேர்ந்திடு நற்காற்றே!*
*மின்னல் விளக்கிற்கு வானகங் கொட்டுமிவ்*
*வெட்டொலி யேன் கொணர்ந்தாய்?*

***7.1.3 நாலடியார் : பாடல் : 233 கூடாநட்பு***

*நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை*
*விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால் - நுண்ணூல்*
*உணர்வில ராகிய ஊதிய மில்லார்ப்*
*புணர்தல் நிரயத்துள் ஒன்று*

***பாடல் : 234***

*பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்*
*ஒருபொழுதும் சொல்லாதே நந்தும் - அருகெல்லாம்*
*சந்தன நீள்சோலைச் சாரல் மலைநாட!*
*பந்தமி லாளர் தொடர்பு*

***7.1.4 சிலப்பதிகாரம் : வழக்குரை காதை – வெண்பா***

*காவி யுகு நீருங் கையிற் றனிச் சிலம்பும்,*
*ஆவி குடிபோன வவ் வடிவும், பாவியேன்!*
*காடு எல்லாஞ் சூழ்ந்த கருங் குழலுங் கண்டஞ்சி,*
*கூடலான் கூடாயினான்.*

*மெய்யில் பொடியும், விரித்த கருங் குழலும்,*
*கையிற் றனிச் சிலம்புங், கண்ணீரும், வையைக் கோன்*
*கண்டளவே தோற்றான் அக் காரிகை-தன் சொல் செவியில்*
*உண்டளவே தோற்றா னுயிர்.*

***7.1.5 புறநானூறு: பாடல் : 330 ஆழி அணையான்***

*வேந்துடைத் தானை முனை கெட நெரிதர,*
*ஏந்து வாள் வலத்தன் ஒருவன் ஆகித்*
*தன் இறந்து வாராமை விலக்கலின், பெருங்கடற்கு*
*ஆழி அனையன் மாதோ, என்றும்*
*பாடிச் சென்றோர்க்கு அன்றியும், வாரிப்*
*புரவிற்கு ஆற்றாச் சீறூர்த்*
*தொன்மை சுட்டிய வண்மையோனே.*

***8. போட்டி இல : 29 இலக்கிய விமர்சனம் ஐந்தாம் பிரிவு : தரங்கள் 12, 13***

***8.1 விடயம்***

***8.1.2 புதுக்கவிதை : புள்ளி அளவில் ஒரு பூச்சி***

***கவிஞர் - மஹாகவி (தொகுப்பு – வீடும் வெளியும்)***

***புள்ளி அளவில் ஒரு பூச்சி***

*புத்தகமும் நானும்,*

*புலவன் எவனோதான்*

*செத்த பின்னும் ஏதேதோ*
*சேதிகள் சொல்ல*

*மனம்*

*ஒத்திருந்த வேளை!*

*ஒழுங்காக அச்சடித்த*

*வெள்ளைத் தாள் மீதில்,*

*வரியின் முடிவினிலே,*

*பிள்ளைத் தனமாய் பிசகாகப்*
*போட்ட காற்*

*புள்ளியைக் கண்டு*

*புறங்கையால் தட்டினேன்.*

*நீ இறந்து விட்டாய்!*

*நெருக்கென்ற தென்நெஞ்சு*

*வாய் திறந்தாய், காணேன்,*

*வலியால் உலைவுற்றுத்*

*''தாயே' என அழுத*

*சத்தமும் கேட்கவில்லை.*

*கூறிட்ட துண்டுக் கணத்துள்*
*கொலையுண்டு*

*ஓர்*

*கீறாகத் தேய்ந்து கிடந்தாய்,*

*அக்கீறுமே*

*ஓரங்குலம் கூட*
*ஓடியிருக்கவில்லை.*

*காட் டெருமை காலடியிற்*

*பட்ட தளிர்போல,*

*நீட்டு ரயிலில்*

*எறும்பு நெரிந்ததுபோல்,*

*பூட்டாநம் வீட்டிற் பொருள்போல*

*நீ மறைந்தாய்.*

*மீதியின்றி நின்னுடைய*

*மெய் பொய்யே ஆயிற்று*

*நீதியன்று நின்சா,*

*நினையாமல் நேர்ந்ததிது,*

*தீதை மறந்து விட மாட்டாயோ*
*சிற்றுயிரே!*

*காதில் அப்பூச்சி கதை ஒன்றே*
*வந்துவந்து*

*மோதிற்று*

*மீண்டும் படிக்க முடியவில்லை*

*பாதியிலே பக்கத்தை மூடிப்*

*படுத்துவிட்டேன்.*

***8.1.1 குறுந்தொகை : பாடல் 300 – குறிஞ்சி – தலைவன் கூற்று***
***பாடியவர் - சிறைக்குடி ஆந்தையார்***

*குவளை நாறுங் குவையிருங் கூந்தல்*
*ஆம்பல் நாறும் தேம்பொதி துவர்வாய்க்*
*குண்டுநீர்த் தாமரைக் கொங்கின் அன்ன*
*நுண்பல் தித்தி மாஅ யோயே*
*நீயே, அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலையே*

*யானே, குறுங்கா லன்னங் குவவுமணற் சேக்கும்*
*கடல்சூழ் மண்டிலம் பெறினும்*
*விடல்சூ ழலனான் நின்னுடை நட்பே.*

***9. போட்டி இல : 32 இசையும் அசைவும் முதலாம் பிரிவு : தரங்கள் 04, 05***

***9.1 விடயம் :*** ***'பேராசை'*** *எனும் தலைப்பில் (பேராசையால் வரும் துன்பம் தொடர்பில்) புதிய ஆக்கப்பாடல் ஒன்றினை ஆக்கம் செய்து அபிநயத்தல்.*

***9.2 நேரம் :*** *4 – 5 நிமிடங்கள்*

***9.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

***9.4 குறிப்பு***

- *இசையும் அசைவும் போட்டியில் பங்குகொள்ளும் போட்டியாளர்கள்* ***பாடசாலை சீருடையுடன்*** *மாத்திரமே பங்குகொள்ளல் வேண்டும்.*
- *கழுத்துப்பட்டி அணிய முடியாது. (போட்டி இடம்பெறும் போது பாதணிகள் அணிய முடியாது)*

***10. போட்டி இல : 33 இசை – தனி இரண்டாம் பிரிவு : தரங்கள் 06, 07***

***10.1 விடயம் :***

***"தமிழுக்கு அமுதென்று பேர் "*** *என்ற பாரதிதாசன் பாடலினை விரும்பிய ஒரே இராகத்திலும், ஒரே தாளத்திலும் பாடுதல். சிட்டைஸ்வரம், ஸ்வரக்கோர்வை, ஜதிக் கோர்வைகள், தாளம், நடைபேத மாற்றங்கள் முற்றாக தவிர்க்கப்படவேண்டும். புதிய இசையமைப்பில் இசையமைத்து பாடப்படவேண்டும். நேரத்திற்கேற்ப பாடல் வரிகளை தெரிவுசெய்யலாம்.*

*10.2* ***நேரம் : 04 - 05 நிமிடங்கள்***

***10.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

*தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்*
*தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!*
*தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!*

*தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!*
*தமிழுக்கு மது வென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் உரிமைச் செம் பயிருக்கு வேர்!*

*தமிழ் எங்கள் இளமைக்குப் பால்! - இன்பத்*
*தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்!*
*தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்*
*தமிழ் எங்கள் அசதிக்கு சுடர் தந்த தேன்!*

*தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்*
*தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்*
*தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்! - - இன்பத்*
*தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!*

***11. போட்டி இல : 34 இசை – தனி மூன்றாம் பிரிவு : தரங்கள் 08, 09***

***11.1 விடயம்***

*கீரவாணி, கல்யாணி, காம்போதி, சுத்தசாவேரி, கானடா, ஆகிய இராகங்களில் அமைந்த தமிழ் மத்திம கால கீர்த்தனை ஒன்றினை சிட்டைஸ்வரத்துடன் பாடுதல். சிட்டைஸ்வரம் இல்லாத கீர்த்தனைகளுக்கு சிட்டைஸ்வரத்தினை ஆக்கம் செய்யலாம். தேவைக்கேற்ப சங்கதிகளை சேர்த்துக்கொள்ள முடியும். தாளம், நடைபேத மாற்றங்கள் முற்றாக தவிர்க்கப்படவேண்டும்.*

***11.2 நேரம்*** : *05 – 06 நிமிடங்கள்*

***11.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

***12. போட்டி இல : 35 இசை – தனி நான்காம் பிரிவு : தரங்கள் 10, 11***

***12.1 விடயம்***

*தமிழ் வாக்கேயகாரர்களான கோபாலகிருஸ்ண பாரதியார் அல்லது பாபநாசம் சிவன் அவர்களால் இயற்றப்பட்ட தமிழ் மத்திம கால கீர்த்தனை ஒன்றினை சிட்டைஸ்வரத்துடன் பாடுதல். சிட்டைஸ்வரம் இல்லாத கீர்த்தனைகளுக்கு சிட்டைஸ்வரத்தினை ஆக்கம் செய்யலாம். தேவைக்கேற்ப சங்கதிகளை சேர்த்துக்கொள்ள முடியும். தாளம், நடைபேத மாற்றங்கள் முற்றாக தவிர்க்கப்படவேண்டும்.*

***12.2 நேரம் :*** *06 – 08 நிமிடங்கள்*

***12.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

***13. போட்டி இல : 36 இசை – தனி ஐந்தாம் பிரிவு : தரங்கள் 12, 13***

***13.1 விடயம்***

*ஒரு இராக தாளத்தில் அமைந்த தமிழ் மத்திமகால கீர்த்தனையினை தெரிவு செய்து, அவ் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தினை ஆலாபனை செய்து, கீர்த்தனையினை பாடி, பொருத்தமான இடத்தில் நிரவல்செய்து, அவ் இடத்தில் முதலாம், இரண்டாம் காலத்தில் கற்பனாஸ்வரங்களைப் பாடுதல்.*

***13.2 நேரம் :*** *12 – 15 நிமிடங்கள்*

***13.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

***14. போட்டி இல : 37 இசை – குழு - I தரங்கள் 06, 07, 08, 09***

***14.1 விடயம்***

*மகாகவி பாரதியார் அவர்களின் "**நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்**" (ஓம் சக்தி) என்ற பாடலை இராகமாலிகையாக பாடுதல். குறைந்தது நான்கு இராகங்களாவது இருத்தல் வேண்டும். தாளம், நடைபேத மாற்றங்கள், சிட்டைஸ்வரங்கள், ஸ்வரக்கோர்வைகள், ஜதிகள் என்பன இடம்பெறலாம். புதிய இசையமைப்பாக இருத்தல் வேண்டும். இராகங்களுக்குள் இராகக்கலப்பு இருத்தலாகாது. நேரத்திற்கேற்ப பாடல் வரிகளை தெரிவுசெய்யலாம்.*

***14.2 நேரம் :*** *06 – 08 நிமிடங்கள்*

***14.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

*நெஞ்சுக்கு நீதியும் தோழுக்கு வாளும்*
*நிறைந்த சுடர்மணிப் பூண்*
*பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம் இவள்*
*பார்வைக்கு நேர்பெருந்தீ*
*வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி*
*வையக மாந்தரெல் லாம்*
*தஞ்சமென் றேயுரைப் பீர்அவள் பேர் சக்தி*
*ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்*

*நல்லதுந் தீயதுஞ் செய்திடும் சக்தி*
*நலத்தை நமக்கிழைப் பாள்*
*அல்லது நீங்கும் என் றேயுலகேழும்*
*அறைந்திடு வாய் முர சே!*
*சொல்லத் தகுந்த பொருளன்று காண்! இங்கு*
*சொல்லு மவர்தமை யே*
*அல்லல் கெடுத்த மரர்க்கிணை யாக்கிடும்*
*ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்*

*நம்புவ தேவழி யென்ற மறைதன்னை*
*நாமின்று நம்பிவிட்டோம்*
*கும்பிட்டெந்நேரமும் சக்தி யென் றாலுனைக்*
*கும்பிடு வேன் மன மே*
*அம்புக்கு தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்*
*அச்ச மில்லாத படி*
*உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்*
*ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்*

*பொன்னைப் பொழிந்திடு மின்னை வளர்த்திடு*
*போற்றி உனக்கிசைத் தோம்*
*அன்னை பராசக்தி என்றுரைத் தோம் தளை*
*அத்தனை யுங்களைந் தோம்*
*சொன்ன படிக்கு நடந்திடு வாய் மன*
*மே தொழில் வேறில்லை காண்*
*இன்னும தேயுரைப் போம் சக்தி ஓம் சக்தி*
*ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்*

*வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு*
*ளாக விளங்கிடு வாய்*
*தெள்ளு கலைத்தமிழ் வாணி ! நினக்கொரு*
*விண்ணப்பஞ் செய்திடு வேன்*
*எள்ளத் தனைப் பொழு தும்பயனின்றி*
*இராதென்றன் நாவினி லே*
*வெள்ள மெனப் பொழி வாய்சக்தி வேல் சக்தி*
*வேல் சக்தி வேல் சக்தி வேல்*

***15. போட்டி இல : 38 இசை – குழு - II தரங்கள் 10, 11, 12, 13***

***15.1 விடயம்***

*விரும்பிய ஒரு தமிழ் பதவர்ணத்தினை ஒரே இராகத்தில் பூர்வாங்க, உத்தராங்கமாக பாடுதல். அத்துடன் ஈழத்துக் கவிஞர் நீலாவணன் அவர்களின் "**ஓ என் அருமை வண்டிக்காரா**" என்ற பாடலை ஈழத்து இசையமைப்பாளர் கண்ணன் நேசம் அவர்களால் இசையமைக்கப்பட்ட இசையமைப்பில் பாடுதல் வேண்டும்.*

***15.2 நேரம் :** 10 – 12 நிமிடங்கள்*

***15.3 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

*ஓ…… வண்டிக்காரா*
*ஓட்டு வண்டியை ஓட்டு*
*போவோம் புதிய நகரம் நோக்கிப்*
*பொழுது போகும் முன் ஓட்டு*
*(ஓ…………வண்டிக்காரா )*

*காவில் பூவில் கழனிகளெங்கும்*
*காதல் தோயும் பாட்டு*
*நாமும் நமது பயணந்தொலைய*
*நடந்து செல்வோம் கூட்டு*

*(ஒ……………வண்டிக்காரா )*

*பனியின் விழிநீர் துயரத் திரையில்*
*பாதை மறையும் முன்னே*
*பிணியில் தேயும் நிலவின் நிழல் நம்*
*பின்னால் தொடரும் முன்னே*

*ஒ……………வண்டிக்காரா*
*ஓட்டு வண்டியை ஓட்டு*
*போவோம் புதய நகரம் நோக்கிப்*
*பொழுது போகுமுன் ஓட்டு*

***16. போட்டி இல : 39 நடனம் – தனி இரண்டாம் பிரிவுதரங்கள் 06, 07***

***16.1. விடயம் : பாரதிதாசன் பாடல்***

| | | |
|---|---|---|
| *பாடல்* | *:* | *துன்பம் நேர்கையில்….* |
| *பாடல் இயற்றியவர்* | *:* | *பாவேந்தர் பாரதிதாசன்* |
| *இராகம்* | *:* | *தேஷ்* |
| *தாளம்* | *:* | *ஆதி* |

*துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ*
*இன்பம் சேர்க்க மாட்டாயா? - எமக்*
*கின்பம் சேர்க்க மாட்டாயா? - நல்*
*அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ*
*அல்லல் நீக்க மாட்டாயா? - கண்ணே*
*அல்லல் நீக்க மாட்டாயா?*

*வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே*
*வாழ்வின் உணர்வு சேர்க்க - எம்*
*வாழ்வின் உணர்வு சேர்க்க - நீ*
*அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்*
*ஆடிக் காட்ட மாட்டாயா? கண்ணே*
*ஆடிக் காட்ட மாட்டாயா?*

*அறமிதென்றும் யாம் மறமிதென்றுமே*
*அறிகிலாத போது - யாம்*
*அறிகிலாத போது - தமிழ்*
*இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்*
*இயம்பிக் காட்ட மாட்டாயா? - நீ*
*இயம்பிக் காட்ட மாட்டாயா?*

*புறம் இதென்றும் நல் அகம் இதென்றுமே*
*புலவர் கண்ட நூலின் - தமிழ்ப்*
*புலவர் கண்ட நூலின் - நல்*
*திறமை காட்டி உனை ஈன்ற எம்உயிர்ச்*
*செல்வம் ஆகமாட்டாயா? தமிழ்ச்*
*செல்வம் ஆக மாட்டாயா?*

***16.2. பொதுவான விதிகள் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

***16.3. நேரம் :*** *05 – 06 நிமிடங்கள்*

***16.4. புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

| 17. போட்டி இல : 40 | நடனம் – தனி | மூன்றாம் பிரிவு | தரங்கள் 08, 09 |
|---|---|---|---|

**17.1. விடயம் : கீர்த்தனை**

| | | |
|---|---|---|
| பாடல் | : | சொல்லாலே இயம்பிடல்….. |
| பாடல் இயற்றியவர் | : | மதுரை ஸ்ரீ ஆர் முரளிதரன் |
| இராகம் | : | வசந்தா |
| தாளம் | : | ஆதி |

**பல்லவி**
*சொல்லாலே இயம்பிடல் இயலாதையா*
*ஆடவல்லோனே தில்லையில் நடனமிடும் அழகை – சொல்லாலே*

**அனுபல்லவி**
*பல்லாயிரம் முனிவர் பரமன் இங்கு*
*இல்லாத இடமேது புவி மீதிலே*
*தினமும் நில்லாது நடனம் ஆடிடும் அழகினை*
*பல்லாயிரம் மொழியில் சொன்னாலும் விளங்காது*

**சரணம்**
*வில்லாக வளைந்த இருபுருவம் அசைந்து*
*பங்கமில்லாத நவரச பாவமுடன் ஆட*
*மெல்லிசை அசைந்தசைந்து உமையவளுமாட*
*நல்லிசையுடன் பல கணங்களுமாட*
*பிறையாட கொன்றை பூவாட புவியில்*
*குறையிலை குறையிலை என சடையுமாட*
*நிறையொடு நீர்வளமிகு கங்கையாட*
*முறையொடு முனிவரும் வேத இசை பாட*
*புலியாடை ஆட புவியாட ஆட*
*புகழ் வேண்டி வேண்டி அடியார்கள் ஆட*
*அரவாட ஆட அண்ட சராசரம் ஆனந்தம் கொண்டு ஆடிடும் அழகினை*

**17.2. பொதுவான விதிகள் :**

*17.2.1. இந் நடனத்தில் அடவுகள், ஜதிகள், ஸ்வரக் கோர்வைகள் இடம்பெறலாம்.*
*17.2.2. நட்டுவாங்கத் தாளமும், பின்னணி இசையும் போதுமானவை.*
*17.2.3. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.*

17.3. **நேரம்** : 06 – 08 நிமிடங்கள்

17.4. **புள்ளித்திட்டம்** : **கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க**

| 18. போட்டி இல : 41 | நடனம் – தனி | நான்காம் பிரிவு | தரங்கள் 10, 11 |
|---|---|---|---|

**18.1. விடயம் : பதம்**

| | | |
|---|---|---|
| பாடல் | : | என் முகம் பாரய்யா… |
| பாடல் இயற்றியவர் | : | பிரம்மஸ்ரீ யாழ்ப்பாணம் என். வீரமணிஜயர் |
| இராகம் | : | அமிர்தவர்ஷினி |
| தாளம் | : | ஆதி |

**பல்லவி**
*என் முகம் பாரய்யா சண்முகனே – என்றும்*
*உன் முகம் கண்டிட உருகி தவித்தேனைய்யா*

***அனுபல்லவி***
*நின் முகமன்று இந்த நிலத்தில் துணையும் உண்டோ*
*பன்னிரு கையனே பார்வதி மைந்தனே*

***சரணம்***
*அருளமிர்த மழையை அகப்பையினில் பொழியும்*
*ஆன்ம வயல் செழிக்கும் அன்பர் வினை அழியும்*
*திருவளர் நல்லை நகர் திருமுருகையா உந்தன்*
*திருவடி நம்பினேன் திக்கு வேறில்லை ஐயா*

### 18.2. பொதுவான விதிகள் :

*18.2.1. நட்டுவாங்கத் தாளமும், பின்னணி இசையும் போதுமானவை.*

*18.2.2. அணிசேர் இசைக்கருவிகள் தவிர்க்கப்படல் வேண்டும்.*

*18.3.* ***நேரம்*** *: 06 – 08 நிமிடங்கள்*
*18.4.* ***புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

### 19. போட்டி இல : 42 — நடனம் – தனி — ஐந்தாம் பிரிவு — தரங்கள் 12, 13

*19.1.* ***விடயம்*** *:*
*போட்டி நடைபெறும் இடத்தில் வழங்கப்படும் தலைப்பை மையமாகக் கொண்டு நடனத்தை ஆக்கம் செய்து சமர்ப்பித்தல் வேண்டும்*

*19.2.* ***குறிப்பு*** *:*

*19.2.1. கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் நடனப் போட்டிகளுக்கான பொதுவான விதிகள் எனும் பகுதியைப் பார்க்கவும்*

*19.2.2. புல்லாங்குழல் அல்லது வயலின் பயன்படுத்த முடியும்.*

*19.3.* ***நேரம்*** *: முன்னாயத்தம் செய்வதற்கு 15 நிமிடங்கள் வழங்கப்படும்.*
*அபிநயித்தல் 05 – 07 நிமிடங்கள்*
*19.4.* ***புள்ளித்திட்டம்*** *:* ***கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.***

### 20. போட்டி இல : 43 — நடனம் – குழு - I — தரங்கள் 04,05,06,07,08,09

*20.1* ***விடயம்*** *:* ***கும்மி நடனம் தொடர்ந்து கோலாட்டம்***

***20.2 பெதுவான விதிகள் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

*20.3* ***நேரம்*** *: 6 – 7 நிமிடங்கள்*
***20.4 புள்ளித்திட்டம் : கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க***

***குறிப்பு:*** *இசை பாரம்பரிய மெட்டமைப்பில் அமைய வேண்டும்.*

### 21. போட்டி இல : 44 — நாட்டிய நாடகம் — திறந்த போட்டி

***21.1 விடயம் : சூடிக்கொடுத்த சுடர்க்கொடி***

*இக் கருத்தினை முன்னிலைப்படுத்தி ஸ்ரீ வில்லிப் புத்தூரில் பெரியாழ்வாரின் மகளாக அவதரித்த ஸ்ரீ ஆண்டாளின் கதாம்சத்தினை சித்திரித்து நாட்டிய நாடகம் தயாரிக்கவும்.*

***21.2 போட்டி விதிகள் :***
*21.2.1 கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.*
*21.2.2 உபகரணங்கள் எதுவும் பயன்படுத்தலாகாது ( உதாரணம் : வாள், கேடயம் போன்றன)*

21.2.3 பக்கவாத்தியம் மாணவர் அல்லது ஆசிரியராலேயே இசைக்கப்படல் வேண்டும் என்பதுடன் அவர்களின் பெயர்ப்பட்டியல் அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்டு, நாட்டிய நாடகப் பிரதியுடன் இணைக்கப்படல் வேண்டும்.

21.3 **நேரம்** : 18 – 20 நிமிடங்கள்

21.4 புள்ளித்திட்டம் : **கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.**

## 22. போட்டி இல : 46 — இலக்கிய நாடகம் — திறந்த போட்டி

**22.1 விடயம் : கம்பராமாயணம் : திருவடி சூட்டும் படலம்**

**22.2 குறிப்புகள் :**

22.2.1 கம்பராமாணம் திருவடி சூட்டும் படலத்தில் பரதன் பரத்துவாச முனிவரிடம் ஆசி பெற்று இரமனைக் காணச் சென்றது முதல் இராமனது திருவடிகளைப் பெற்றுத் திரும்புவது வரையிலான காட்சிகளை வெளிப்படுத்தும் செய்யுள்களைத் தெரிவுசெய்து, நாடகப்பிரதி ஆக்கப்படல் வேண்டும்.

22.2.2 நாடகப் பிரதி புத்தாக்கமுடையதாக இருத்தல் வேண்டும்.

22.3 **போட்டி விதிகள் :** **கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.**

22.4 **நேரம்** : 30 நிமிடங்கள்

22.5 **புள்ளித்திட்டம்** : **கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.**

## 23. போட்டி இல : 47 — வில்லுப்பாட்டு — திறந்த போட்டி

**23.1 விடயம்** :

1. வருந்தாதார் வாழ்க்கை திருந்துதல் இன்று - பழமொழி நானூறு
2. நகுதற் பொருட்டன்று நட்பு - திருக்குறள்

**குறிப்பு** :

வில்லுப்பாட்டின் கதைப்பிரதி, தமிழ் இலக்கியமொன்றைத் தெரிவு செய்து, அதிலிருந்து எடுக்கப்பட்ட காட்சியை அடிப்படையாகக் கொண்டு விடயத் தலைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

23.2 போட்டி விதிகள் : **கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.**

23.3 நேரம் : 20 நிமிடங்கள்

23.4 புள்ளித்திட்டம் : **கல்வியமைச்சின் செயலாளரின் 35/2018 ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பார்க்க.**

## 24. போட்டி இல : 48 — முஸ்லிம் நிகழ்ச்சி — திறந்த போட்டி

**24.1 விடயம் : கவிதா நிகழ்வு**

**24.2 விடயபரப்பு : சேகுத்தம்பிப் புலவரின் காரணமாலை நூலில் 'திருமக்கா நாட்டுச் சிறப்பு'** எனும் பகுதியில் வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கவிதை வடிவில் ஆக்கத்தைப் படைத்து எடுத்துரைஞர்கள் மூலம் கவிதா நிகழ்வாக நிகழ்த்துதல் வேண்டும்.

24.3 **போட்டி விதிகள் :**

24.3.1 தெரிந்தெடுக்கப்பட்ட விடயப்பொருளை மையமாகக் கொண்டு ஆரம்பம், வளர்ச்சி, உச்சம், முடிவு என்ற கட்டமைப்புக்கேற்ப நெடுங்கவிதையை உருவாக்க வேண்டும்.

*24.3.2* *நெடுங்கவிதையின் கட்டமைப்பு ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சம்பவங்களின் அல்லது நிகழ்ச்சிகளின் தொகுப்பாக அமைய வேண்டும்.*

*24.3.3* *எடுத்துரைஞர்கள் தனிமொழியாக அமையுமாறு கவிதையை எடுத்துரைத்தல் வேண்டும்.*

*24.3.4* *கவிதைக்கூடாக வெளிப்படும் காட்சிப் பாங்கான செயல்களை அல்லது சம்பவங்களை எடுத்துரைஞர்கள் ஆற்றுகையாக நிகழ்த்திக்காட்ட வேண்டும்.*

*24.3.5* *கவிதைகள் புத்தாக்கமுடையவையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் புதுக்கவிதை வடிவத்தைப் பின்பற்றி ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*24.3.6* *நூலில் உள்ள கவிதை வரிகளைப் பயன்படுத்துதல் கூடாது.*

*24.3.7* *ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள், இசைக்கூறுகள் பயன்படுத்தப்பட முடியாது.*

*24.3.8* *பாத்திரங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.*

| | | |
|---|---|---|
| *தலைமை* | - | *ஒருவர்* |
| *உரைஞர்கள்* | - | *01 அல்லது 02 பேர்* |
| *எடுத்துரைஞர்கள்* | - | *04 அல்லது 05 பேர்* |

*24.3.9* *நிகழ்ச்சி தொடங்கி முடியும் வரை திரையை மூடித் திறத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.*

*24.3.10* *இஸ்லாமிய கலாசார ஆடை, அணிகள் பயன்படுத்தப்படலாம்.*

*24.3.11* *முன்வைப்புகள், எந்தவகையிலும் எவரையும் புண்படுத்தக் கூடாது.*

*24.4* ***நேரம்*** : *15 – 20 நிமிடங்கள்*

*24.5* ***புள்ளித்திட்டம்*** :

| **இல** | **விடயம்** | **புள்ளி** |
|---|---|---|
| 1 | *பொருட்செறிவும் புதுமைத்துவமும்* | *25* |
| 2 | *கவித்துவமும் எடுத்துரைப்பும்* | *20* |
| 3 | *ஓசையும் உணர்ச்சியும்* | *20* |
| 4 | *ஒழுங்கமைப்பும் முகாமையும்* | *20* |
| 5 | *உத்திகள்* | *10* |
| 6 | *நேரம்* | *05* |
| | *மொத்தம்* | *100* |

***வசந்தா பெரேரா***
*செயலாளர்*
*கல்வி அமைச்சு*
*'இசுருபாய'*